

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், இராசிபுரம் நகராட்சி மற்றும் காளப்பநாய்க்கன்பட்டி பேரூர் ஆகிய வார்டு பகுதிகளில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்முகாமில் ஒன்றியச் செயலாளர் அசோக்குமார், நகரச் செயலாளர்கள் என்.ஆர்.சங்கர், ராணா ஆனந்த், சிவக்குமார், செ.பூபதி, நாமக்கல் நகர்மன்றத் தலைவர்கள் து.கலாநிதி, கவிதா சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் வட்டாட்சியர் சக்திவேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில்

# திருநெல்வேலி மாவட்ட மருத்துவக் கல்லூரி - மருத்துவமனையில் ஆய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

சென்னை, டிச.25-

திருநெல்வேலி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவமனை மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் மருத்துவ முகாம்களை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர், ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (23.12.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழையினால் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் தண்ணீர் வந்துள்ள இடங்களில் மீண்டும் தண்ணீர் உட்புகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு, நோயாளிகளை பரிசோதனை செய்யப்படும் ஸ்கேன் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்டவைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பார்வையிட்டு, ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் தொடர்ச்சியாக ஒரு வார காலமாக மேற்கொள்ளப்பட்டு, பல இடங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. குறிப்பாக தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் படிப்படியாக மக்கள் இயல்பு நிலைக்கு மாறி உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இன்னும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறித்தும், பொதுமக்களின் நலன்கருதி ஏற்பட்டுள்ள மருத்துவ முகாம்கள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் தூத்துக்குடி மாநகராட்சி மூன்றாவது மைல், ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம், கீதா பள்ளி, குறிஞ்சி நகர் ஆகிய வற்றையும், ஊரகப்பகுதிகளான கூட்டாங்குழி, சுப்பிரமணியபுரம், நட்டாத்தி, மங்கலக்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, ஏரல் காயல்பட்டிணம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு மருத்துவ முகாமிலும் 100க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். 17.12.2023 முதல் 23.12.2023 வரை 2,682 மொத்த முகாம்களை வாயிலாக 95,124 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இதில் 864 பேர் காய்ச்சல், 2,565 பேர் சளி, இருமல் சிகிச்சை பெற்றுள்ளனர்.

### நடமாடும் மருத்துவ வாகனங்கள்!

தொடர்ந்து, முதலமைச்சர் மருத்துவ முகாம்களை நீடித்திட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், நடமாடும் மருத்துவ வாகனங்களாக தூத்துக்குடியில் 93 வாகனங்கள், திருநெல்வேலியில் 31 வாகனங்கள், கன்னியாகுமரி 36 வாகனங்கள், தென்காசியில் 30 வாகனங்கள் என மொத்தம் 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

தொடர்ந்து, இன்று (24.12.2023) மழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, காயல்பட்டிணம், திருச்செந்தூர், கருங்குளம், உடன்குடி, சாத்தான்குளம் உள்ளிட்ட 50 இடங்களில் தனியார் மருத்துவமனைகளான வேலம்மாள் மருத்துவமனை, வடமலையான், மீனாட்சி மிஷன், அரிஸ்டோ, ஆசீர்வாதா, பாலா, தேவதாஸ் உள்ளிட்ட சுமார் 14 மருத்துமனைகளை ஒருங்கிணைத்து மெகா அளவிலான மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சரிசெய்யப்பட்டுள்ளது. நான்கு மாவட்டங்களை பொறுத்தவரையில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்கள்,261துணை சுகாதார நிலையங்கள் பாதிக்கப்பட்டது. மேலும், 315 மருத்துவ கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை சீரமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து பொதுப்பணித்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாளையங்கோட்டை மனக்காவலன் பிள்ளை நகரில் நடைபெற்ற மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

மேலும், பாளையங்கோட்டை சித்தா மருத்துவக்கல்லூரியில் சிகிச்சை பிரிவுகள் மற்றும் புற நோயாளிகள் பிரிவினையும்,தெற்கு வள்ளியூர் ஊராட்சி நடைபெற்று வரும் மருத்துவ முகாமினையும், களக்காடு அரசு மருத்துவமனையில் மழை நீர் தேங்கி, தற்போது மறு சீரமைக்கப்பட்டதை பார்வையிட்டு, மருத்துவமனையிலுள்ள சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சேரன்மகாதேவி மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து பார்வையிட்டு, கேட்டறிந்தார்.

நடைபெற்ற ஆய்வில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை முதல்வர் மரு.ரேவதி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.லதா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ராஜேந்திரன் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், களக்காடு நகர்மன்ற தலைவர் திருமதி.சாந்தி சுபாஷ், பணக்குடி பேரூராட்சி தலைவர் திருமதி.தனலெட்சுமி,களக்காடு நகராட்சி துணைத்தலைவர் பி.சி.ராஜன், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சேவியர் செல்வ ராஜா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், தெற்கு வள்ளியூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. முத்தரசி ரகு பால் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு செ. அரங்கராசன்

### டிசம்பர் 25 (2002)



ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில்

# தூத்துக்குடிக்கு நிவாரண உதவி பொருட்கள்!

சிவகங்கை, டிச. 25-

இம்மாதம் 17,18 தேதிகளில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, ஆகிய நான்கு மாவட்டங்களில் பெய்த பெரும்மழையினால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டது. இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாநில சுற்றுச்சூழல் அணிஅமைப்பாளர் சேனாதிபதி ஆகியோர் ஆலோசனையின் பேரில்மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் இரண்டரை டன் அரிசி, வேஷ்டி சேலை மற்றும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அ. வல்லபாய் இந்த நிவாரண பொருட்களை வேனில் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணித் தலைவர் எம்.கார்கண்ணன், துணை அமைப்பாளர்கள் மு.குமரன் , சாய் சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'

# உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்!

தேசிய உழவர் நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.25-**

**தேசிய உழவர்கள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**



தேசிய உழவர்கள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"உழுவார் உலகத் தார்க்கு ஆணி" எனும் அளவில் உலகை உய்விக்கும் உயர்குடியாம் உழவர்கள் அனைவருக்கும் தேசிய உழவர்கள் நாள் வாழ்த்துகள்!

பெருமழையால் பயிர்களையும் கால்நடைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள உழவர்களுக்கு உறுதுணையாக நமது அரசு நின்று காக்கும்.

இவ்வாறு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில்

# 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்களில் 2,490 மனுக்கள் பதிவு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தகவல்!

நாமக்கல், டிச. 25 -

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் நகராட்சி வார்டு பகுதிகளுக்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி (தெற்கு), ''மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமை பார்வையிட்டு பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் நாமக்கல் நகராட்சியில் நடைபெற்று வரும் மக்களுடன் முதல்வர் முகாமை பார்வையிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு திட்டத்தை



தொடங்கி வைத்தார். இதில் சேவைகள், திட்டங்கள், பயன்கள் அவர்களுக்கு போய் சேர வேண்டும் என்கின்ற அந்த கருத்தின் அடிப்படையில், அரசாங்கம் பொது மக்களே தேடிச் சென்று அவர்களுடைய மனுக்களை குறைகளை பெற்று தீர்வு கண்டு நடவடிக்கை எடுத்து உரியவர்களுக்கான நிவாரணத்தை தேடி தருவது தான் மக்களுடன் முதல்வர் என்கின்ற அந்த சிறப்பு திட்டமாகும்.

இச்சிறப்பு திட்டத்தில் பொதுமக்கள் அரசின் உடைய பல்வேறு துறை சார்ந்த நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள் காலதாமதம் இன்றி மக்களை விரைவாக சென்றடைய வேண்டும் என்பதே நோக்கமாகும். அந்த அடிப்படையில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமானது நாமக்கல் மாவட்டத்தில் 39 இடங்களில் நடத்தப்படும் என்று திட்டமிடப்பட்டு இது வரை 20 முகாம்கள் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது. நாமக்கல் நகராட்சி, இராசிபுரம் நகராட்சி, திருச்செங்கோடு நகராட்சி, பள்ளிபாளையம் கொமாரபாளையம் ஆகிய 5 நகராட்சிகளில் அங்கு இருக்கின்ற மக்கள் தொகை அடிப்படையில், வார்டு அடிப்படையில் பல்வேறு கட்டங்களாக மக்களுடன் முதல்வருக்கான சிறப்பு திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. மேலும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 18 பேரூராட்சிகளிலும் இந்த முகாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை நடந்த முகாம்களில் 2,490 பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு அது முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,427 மனுக்கள் நகராட்சி அளவிலும் பேரூராட்சி பகுதியில் 1063 மனுக்களும் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பெறும் மனுக்கள் பெற்று 30 நாட்களுக்குள் அவர்களுக்கு தீர்வு காணப்பட்டு அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற அந்த சேவைகள் திட்டங்கள் ஆணைகள் உரிய முறையில் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முகாமில் ஒன்றிய செயலாளர் அசோக்குமார், நகர செயலாளர்கள் என். ஆர்.சங்கர், ராணா ஆனந்த், சிவக்குமார், செ.பூபதி, நாமக்கல் நகர்மன்ற தலைவர்கள் து.கலாநிதி, கவிதா சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் வட்டாட்சியர் நாமக்கல் சக்திவேல், பேரூர் செயலாளர்கள் தனபால், முருகேசன், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அதிநவீன கண் சிகிச்சைக் கருவி!

## த.சோழராஜன் - எஸ்.இளவரசன் தொடங்கி வைத்தனர்!

மன்னார்குடி, டிச.25-

தமிழ்நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றிவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், மருத்துவத்துறையின் சாதனையாகவும் , மன்னார்குடி மக்களுக்கு வரப்பிரசாதமாகவும், மன்னார்குடி அரசு மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவுக்கு ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் நவீன கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் செயல்படும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், கண் சிகிச்சை பிரிவுக்கு, மன்னார்குடி தொகுதியின் எம்.எல்.ஏ.வும் தொழில் முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் பரிந்துரையினை தாயுள்ளத்தோடு ஏற்ற தமிழ்நாடு அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும், சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதல்களின் படியும் , ரூ.25 லட்சம் மதிப்புள்ள கணினி கண் பரிசோதனை கருவி, (ஃபேகோ நுண் துளை கண்புரை நவீன அறுவை சிகிச்சை கருவி), கண் நீர் அழுத்த நோய்க்கு சிகிச்சை அளிக்கும் யாக்லேசர் எனும் கருவி, துல்லியமான விழித்திரை பரிசோதனை கருவிகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

இந்த கருவிகளின் செயல்பாடுகள் தொடக்க விழா, மன்னார்குடி அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. மருத்துவமனை தலைமை மருத்துவர் என். விஜயகுமார், நிலைய மருத்துவரும், கண் சிகிச்சை பிரிவு மூத்த மருத்துவருமான எம். கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலையில் மன்னார்குடி நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், மன்னார்குடி ராஜகோபால சுவாமி அறங்காவலர் குழு தலைவர் எஸ். இளவரசன் ஆகியோர் கலந்துகொண்டு நவீன கருவிகளின் செயல்பாடுகளை தொடங்கி வைத்தனர்.

இவ்விழாவில் நகர்மன்ற துணைத் தலைவர் ஆர். கைலாசம், அரசு மருத்துவமனை கண் மருத்துவர்கள் செ.மீரா ராவுத்தர், சா. சத்யா கண் பரிசோதகர்கள் குணசேகரன், ராஜலட்சுமி, நேசக்கரங்கள் ஒருங்கிணைப்பாளர் கோபால கிருஷ்ணன் மற்றும் செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

கண் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி, திருச்சி, மதுரை , தஞ்சாவூர் என மக்கள் சென்று சிகிசை பெற்று வந்த நிலையில் ,இனி இந்த நவீன கருவிகள் மூலம் மன்னார்குடியில் நோயாளிகள் இனி ஒரே நாளில் கண் அறுவை சிகிச்சைகள் செய்து கொண்டு வீடு திரும்பலாம். இந்த கருவிகள் பயன்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு வலியும் குறைவாக இருக்கும். மேலும் நீர் அழுத்த நோய், சர்க்கரை நோயினால் கண்களில் ஏற்படும் பாதிப்புகளுக்கு தஞ்சை, திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்படாமல் மன்னார்குடி அரசு மருத்துவமனையிலேயே செய்தும் கொள்ளலாம்.

மேலும் மன்னார்குடி மருத்துவமனையில் இது வரை ஒரு மாதத்துக்கு சராசரியாக 1500 முதல் 2000 நோயாளிகள் வரை சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்ட நிலையில் . இந்த கருவிகளின் வரவால் விரைவான சிகிச்சையின் காரணமாக ஒரு மாதத்தில் சுமார் 5 ஆயிரம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இந்த கருவியை தந்த தமிழ்நாடு முதல்வருக்கு பொது மக்களும், பல்வேறு சமூக மைப்புக்களும் நன்றியை தெரிவித்துள்ளனர்.

## வேளச்சேரியில் நிவாரண உதவி!

சென்னை, டிச. 25-

நியாய விலைக் கடை களில் வழங்கப்பட்டு வந்த வெள்ள நிவாரண நிதியினை வாங்க இயலாத ஒரு நபர் கார்டு தார்களான முதியோர் மாற்றுத் திறனாளிகளுக்கு கழகத்தினரின் உதவியால் அவர்களின் இல்லத்திற்கே சென்று ஊழியர்கள் முறைப்படி வழங்கினர்.

மிக்ஜாம் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய். 6000 நிவாரண உதவித்தொகை பெற ரேஷன் கடைக்கு வருகை தர இயலாத மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு ரேஷன் கடை ஊழியர்களின் உதவியுடன் வேளச்சேரி மேற்கு பகுதி) 175 வது வட்ட கழக நிர்வாகிகள் சார்பில் வி.மனோகரன் (அவைத் தலைவர்), ஜி.இ. தணிகைவேல் ஆகியோர் வழங்கினர். நிவாரண உதவித்தொகை பெற்றவர்கள் மனதார மக்கள் முதல்வரையும், தமிழக அரசையும் வெகுவாக பாராட்டினார்கள்.